நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 108/2023

<u>அ.சா:2 (LW 2)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | குமரன். | சாதி | : |
| தந்தை பெயர் | : | | தொழில் | : |
| கிராமம் | : | | மதம் | : |
| வட்டம் | : | | வயது | : |

29.10.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 11.37 மு.ப – 11.47 மு.ப

நான் தற்பொழுது ஸ்ரீரங்கபுரம் ரைஸ்மில் தெற்கு தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 4 எதிரிகளையும் எனக்கு தெரியும். முதல் எதிரி சந்திரன் எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். 2, 3 எதிரிகளான வேல்முருகன், ராதா (எ) ராதாகிருஷ்ணன் 1வது எதிரியான சந்திரனின் மைத்துனர்கள் ஆவார்கள். 4வது எதிரி வீரபெருமாள் மேற்கூரிய எதிரிகளுக்கு நண்பர் ஆவார். நாங்கள் ஸ்ரீரங்கபுரம் ரைஸ்மில்

தெருவில் குடியிருந்து வருகிறோம். எனக்கு பிரித்திகா என்ற பெண்ணும் விஷ்ணுபிரசாத் என்ற மகனும் உள்ளனர். எனது அப்பா சோமசுந்தரம் எங்களுடன் குடியிருந்து வருகிறார். 24.12.2021ம் தேதி எனது மகன் விஷ்ணுபிரசாத்திற்கு அவர் சுயமாக சம்பாதித்த 11 ஏக்கர் தோட்டத்தை எனது மகனுக்கு கிரையமாக விற்றுவிட்டார். 8 ஏக்கர் காட்டினை எனது அப்பா எனக்கு தானசெட்டில்மெண்டாக 28.06.2022ம் தேதியில் வழங்கினார். எனது அப்பா பெயரில் EB சர்வீஸ், கிணறு மற்றும் கிணற்றை சுற்றியுள்ள இடங்களை 2வது எதிரியான வேல்முருகன் மனைவி கங்கா தேவிக்கு மோசடியாக கிரையம் செய்து கொண்டார். இது சம்பந்தமாக நான் ஆர்.டி.ஓ அலுவலகத்தில் 2வது எதிரியான வேல்முருகன் மற்றும் அவரது மனைவி கங்கா தேவி மீது புகார் கொடுத்தேன். அது விசாரணைக்கு வந்ததிருந்தது. இதன் காரணமாகவும் சொத்தை எனக்கும் எனது மகனுக்கும் கொடுத்ததில் முன்விரோதம் எங்கள் குடும்பத்திருக்கும் எதிரிகளுக்கும் இடையே இருந்து வந்தது. கடந்த 27.08.2022ம் ஆண்டு 3 எதிரிகளின் தூண்டுதலின் பேரில் ஸ்ரீரங்கபுரம் வணிக வளாகம் முன்பு நான் நின்றுக்கொண்டிருந்தபொழுது எனது அண்ணன் 1வது எதிரி சந்திரன் கையில் அருவாளுடன் வந்து சொத்தெல்லாம் நீ எழுதி வாங்கிட்டாயா எங்களுக்கு சொத்து கிடையாதா நீ செத்தால்தான் சொத்து வரும் என்றும் கெட்ட வார்தையானா தேவடியா மகனே என்று பேசி எதிரி 1 கையில் வைத்திருந்த அருவாளால் நீ செத்தால்தான் எனக்கு சொத்து வரும் இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி என்னை வெட்ட வரும்பொழுது நான் கையால் மறித்ததால் வலது பக்க மூன்று விரல்களான நடு விரல், மோதிர விரல், சுண்டு விரல் மற்றும் இடது பக்க இரண்டு விரல்களான மோதிர

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.29 16:02:02 +0530

விரல், சுண்டு விரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டு அனைத்து விரல்களும் தொங்கிவிட்டன. கையில் வலி ஏற்பட்டவுடன் இடது பக்க பின் தலையிலும் இடது கை புஜம் மற்றும் இடது கை மொழிக்கு கீழ், இடது கால் தொடைக்கு கீழ் ஆகியவற்றில் எனது அண்ணனான முதல் எதரி அருவாளால் வெட்டியதில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டது. எங்கள் ஊரை சேர்ந்த கண்ணன், முருகன் ஆகியோர் சத்தம் போட்டவுடன் எதிரி தப்பி சென்றுவிட்டனர். அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு என்னை அனுப்பி வைத்தனர். என்னுடன் எனது மனைவியான அ.சா.1ம் ஆம்புலன்ஸில் வந்தார். மருத்துவமனைக்கு வந்த போலீசாரிடம் எனது மனைவி அ.சா.1 புகார் கொடுத்தார். நான் போலீசாரிடம் மருத்துவமனையில் வைத்து நான் உடுத்திருந்த வெள்ளை காப்பி கலர் கலந்த கட்டம்போட்ட சட்டை மற்றும் வெள்ளை காப்பி பச்சை நிறம் கலந்த கைலி ஆகியவற்றில் இரத்த கரை படித்திருந்ததை நானும் எனது மனைவியும் போலீசாரிடம் ஒப்படைத்தோம். என்னை மேல் சிகிச்சைக்காக மதுரையில் உள்ள விக்ரம் மருத்துவமனைக்கு அன்றைய தினமே தேனி க.விலக்கு முதலுதவி பெற்ற பின்னர் அங்கு சென்றோம். அங்கு 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். தற்பொழுது வரை கையில் ஏற்பட்ட காயங்களினால் இயல்பான அன்றாட வேலைகளை செய்ய இயலவில்லை. என்னிடம் காட்டப்படும் மர கைப்பிடியுடன் கூடிய அருவாளால்தான் என்னை 1வது எதிரி வெட்டினார். அந்த அருவாள் ஏற்கனவே **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 02.21 பி.ப – 02.51 பி.ப

ஸ்ரீரங்கபுரத்திற்கு வருவதற்கு முன்னர் செக்காப்பட்டியில் வசித்து வந்தோம். செக்காபட்டியில் உள்ள நிலத்தை எனது தாயார் எனக்கு தானமாக கொடுத்தார் என்றால் சரிதான். தான பத்திரத்தின் நிபந்தனைகளை முறையாக பின்பற்றாததால் தான பத்திரத்தை எனது தாயார் 15.03.2000ல் இரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னர் மேற்படி சொத்தை 1ம் எதிரியின் மனைவிக்கு கிரையத்திற்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த சொத்து சம்பந்தமாக நிலக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து ஒருதலைப்பட்டசமாக உத்தரவு பெற்றேன் என்றால் சரிதான். ஒருதலைப்பட்ச உத்தரவினை பயன்படுத்தி அந்த சொத்தை எனது மனைவிக்கு எழுதி கொடுத்தேன் என்றால் 2003ல் ஒரு உத்தரவு 2008ல் ஒரு உத்தரவு அதன் பின்னர் 2011ல் எனது மனைவியின் பெயருக்கு மாற்றி கொடுத்தேன். ஒருதலைபட்ச உத்தரவினை இரத்து செய்ய கோரி IA 1/2023 in OS 195/2000 என மனு தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். ஒருதலைபட்ச உத்தரவினை மீள பெற மனு தாக்கல் செய்ததால்தான் நான் 1ம் எதிரி மீது முன்விரோதமாக உள்ளேன் என்றால் சரியல்ல. 2, 3 முறை உத்தரவு ஏற்பட்ட பிறகும் முதல் எதிரி வழக்கை நடத்த மனு தாக்கல் செய்திருந்தார் என்றும் அதனால் விரோதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பா பெயரில் இருந்த சொத்துகளின் ஒரு பகுதியை எனக்கும் 1ம் எதிரிக்கும் தனித்தனியாக கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. எனது அப்பா பெயரில் இருந்த சொத்துகளை நானும் எனது மகனும் ஆவணப்படுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அவர் விருப்பப்பட்டுதான் கிரையம் செய்து கொடுத்தார். அவர் நோய்வாய்பட்டிருந்த நேரத்தில்தான் மோசடி செய்து கிரையம்

SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2025.10.29 16:02:30 +0530

பெற்றுவிட்டேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி தனக்குரிய பங்கை கேட்டு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் இருந்த EB சர்வீஸ், கிணறு மற்றும் அதனை சுற்றியுள்ள வாரி வாய்க்காலினை 2ம் எதிரி தன் மனைவிக்கு எழுதி வாங்கியதாக சொல்வது பொய் என்றும் அவ்வாறு ஆவணம் எதுவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 27.08.2022ம் 06.30 மணிக்கு மேல் எழுந்தேன். எனது வீட்டிலிருந்து வணிக வளாகம் சுமார் 250 அடி தூரம் இருக்கும். தோட்டத்திற்கு செல்வதற்காக நின்றுக்கொண்டிருந்தேன். என்னுடன் கண்ணன், முருகன் மற்றும் பலர் இருந்தார்கள். 27.08.2022 காலை 06.00 மணிக்கு 1ம் எதிரி வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து 1ம் எதிரியை தாக்கியதில் 1ம் எதிரிக்கு கண், தலை, கை, கால் இடங்களில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவரை தாக்கும்பொழுதுதான் நான் என் கையில் வைத்திருந்த கத்தி உருவி எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கியதில் ஊர்காரர்கள் கூடிவிட்டார்கள் என்றும் அதிலிருந்து தப்பிக்க முற்பட்டபொழுதுதான் வீட்டில் இருந்த கதவு முற்றத்தில் மோதி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு 07.45லிருந்து 08.00 மணிக்கு சென்றேன். அரசு மருத்துவமனையில் 3 – 4 மணி வரை நேரம் இருந்தேன். மருத்துவமனைக்கு செல்லும்பொழுது சுயநினைவுடன்தான் இருந்தேன். தையல் போட்டதில் ஊசி போட்டதால் மயங்கிவிட்டேன். எனக்கு ஏற்பட்ட காயம் குறித்து போலீசாரிடம் சொன்னேன். நான் போலீசாரிடம் சொன்னதை அவர் எழுதி கொண்டார்கள் என்றால் ஆமாம். அதன் பின்னர் மதுரை விக்ரம் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு போலீசார் விசாரிக்கவில்லை. போலீசார் அருவாளை காண்பித்து

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.29 16:02:36 +0530

விசாரித்தார்களா என்றால் அருவாளை காண்பித்து விசாரிக்கவில்லை. கண்டமனூர் காவல் நிலைய குற்ற எண்.27/2009 என்ற வழக்கில் நான் 3வது எதிரியாக இருந்தேன் என்றும் சதீஸ், கண்ணன் என்பவர்கள் எனது ஊர் செக்காப்பட்டியை சார்ந்தவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன எஸ்.என் ராமசாமிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. 1ம் எதிரி சேதுராஜனுக்கு உதவியாக கூலிபடையை கூட்டி வந்து உதவி செய்தேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையிலிருந்து வந்த பிறகு போலீசார் விசாரிக்கவில்லை. வணிக வளாகம் முன்பு கோபால்சாமி வீட்டிற்கு முன்பு சம்பவம் நடந்தது. மேற்கூரிய இடத்தில்தான் சம்பவம் நடந்தது என்று போலீசாரிடம் மட்டும் சொன்னேன். வேறு யாரிடமும் சொல்லவில்லை. நான் மருத்துவமனையில் தையல் போட்ட பிறகு மயக்க நிலையில் இருந்தேன் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரிக்கும்பொழுதும் 1ம் எதிரியின் வீட்டிற்குள்தான் சம்பவம் நடந்தது என்றும் 1ம் எதிரி வீட்டிற்குள் நடந்த சம்பவத்தால்தான் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும் அதற்கு பின்னிட்டு எனது மனைவி சம்பவ இடத்தை பார்க்கமால் சம்பவத்தை மாற்றி ஆலோசனை செய்து பொய்யான புகாரினை கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வணிக வளாகத்திற்கு முன்பு சம்பவம் எதுவும் நடக்கவில்லை. 1ம் எதிரி காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அருவாள் பற்றிய அங்க அடையாளங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை. சா.பொ.1 அருவாளினால்தான் சம்பவம் நடந்தது என்றால் இரத்தம் ஒட்டியிருக்கும் என்றால் ஆமாம். 1ம் எதிரி சா.பொ.1 அருவாளினால் வெட்டவும்

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.10.29 16:02:42 +0530

இல்லை தகாத வார்த்தையால் திட்டவும் இல்லை என்றும் நான்தான் 1ம் எதிரி வீட்டிற்குள் நுழைந்தை அவரை தகாத வார்த்தையால் பேசி தாக்கியுள்ளேன் என்றும் அவரை தாக்கும்பொழுது நான் வைத்திருந்த ஆயுத்ததினால்தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 2 முதல் 4 எதிரிகள் 1ம் எதிரியை தூண்டிவிடவிடுவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரி என்னிடம் உள்ள சொத்தை அபகரித்துவிடுவார் என்பதற்காக அவர் மீது பொய் வழக்கு தொடுத்துள்ளேன் என்றும் இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2025.10.29 16:02:49 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:29.10.2025